செ.வெ.எண்: 20/2021 நாள்: 09.08.2021

## திருப்பூர் மாவட்டம்.

## தொலைபேசி வாயிலாக பொதுமக்களிடம் குறைகேட்பு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திருப்பூர் மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கில், பொது மக்களிடம் தொலைபேசி வாயிலாக குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் இன்று (09.08.2021) நடைபெற்றது.

திருப்பூர் மாவட்டத்தில் பொதுமக்களின் குறைகளை தீர்க்கும் வகையில் பிரதி வாரம் திங்களன்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் பொது மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்று வந்தது. தற்போது கொரானா வைரஸ் (Covid – 19) தொற்று காரணமாக மேற்படி பொது மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக பொது மக்கள் தங்களது குறைகளை தெரிவிக்க பிரதி வாரம் திங்களன்று மாவட்ட ஆட்சியரக வாயிலில் மனுக்களை பெறும் பொருட்டு மனுக்கள் பெட்டி வைக்கப்பட்டு, அவ்வாறு வரப்பெறும் விண்ணப்பங்களை பரிசீலித்து உரிய துறை வாரியக பிரித்தனுப்பி பொது மக்களின் குறைகள் களையும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனைத் தொடர்ந்து, கொரனா வைரஸ் தொற்று பரவி வரும் சூழ்நிலையில், பொது மக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு நேரடியாக வருவதை தவிர்க்கும் பொருட்டு பொது மக்கள் தங்களது குறைகளை பிரதி வாரம் திங்கள்கிழமை அன்று **0421 - 2969999** என்ற தொலைபேசி மற்றும் **97000 - 41114** என்ற அலைபேசி மூலம் தெரிவிக்கும் சிறப்பு மக்கள் குறைதீர்க்கும் நாள் முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (09.08.2021) நடைபெற்றது. இக்கூட்டத்தில் தொலைபேசி வாயிலாக பொதுமக்களிடமிருந்து வீட்டுமனைபட்டா மற்றும் முதியோர் உதவித் தொகை, புதிய குடும்ப அட்டை வேண்டியும், சாலைவசதி, குடிநீர் வசதி வேண்டியும் என உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக 63 அழைப்புகள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த குறைகளை விசாரணை செய்து அதன் மீது உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திருமதி.வாசுகி உள்ளிட்ட அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**